புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • டிசம்பர் 21, 2023 • புரட்சி 23 • முழக்கம் 49 • விலை ரூ.3.00

# ஜாதி பேதமும் வர்க்க பேதமும் வேறு வேறல்ல!

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

**டிசம்பர் 16-ஆம் தேதி கோவை அண்ணாமலை அரங்கத்தில் நடந்த அனைத்திந்திய சாதி ஒழிப்பு இயக்கத்தின் 5-வது அகில இந்திய மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொண்டு கழகத் தலைவர் ஆற்றிய உரை.**

பொதுவுடமை இயக்கங்கள் ஜாதியின்பால் தன் கருத்தைத் திருப்புமா என்ற எண்ணம் பல வேளைகளில் இருந்திருக்கிறது. அதுகுறித்த விவாதங்களும் கூட இருந்திருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்கூட எம். சி.பி.அய் கட்சியினர் (யுனைடெட்) என்னிடம் வந்து பெரியார் நினைவுநாளை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் "மார்க்சியத்தின் மீதான எங்கள் விமர்சனங்கள்" என்ற தலைப்பில் நீங்கள் உரையாற்ற வேண்டும் என்று கேட்டனர். மார்க்சியர்கள் எப்போதுமே உலக நடப்புகளை துல்லியமாகக் கணித்து அதற்கேற்ப தங்கள் வரையறைகளை, செயல்திட்டங்களை வகுத்துக் கொள்ளும் பண்பு கொண்டவர்கள்.

ஜாதிய சிக்கல்களை கையிலெடுக்கிற மார்க்சிய இயக்கங்கள் அண்மைக்காலங்களில் பல இயக்கங்கள் வந்துவிட்டன. ஆனால் இதற்குமுன்புவரை ஏன் இவ்வளவு காலம் ஜாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஒரு வலுவான இயக்கத்தை முன்னெடுக்கவில்லை என்ற ஏக்கம் இருந்தது. அதை பணியை இப்போது ரெட் ஸ்டார் அமைப்பு முன்னெடுத்திருக்கிறது. அதற்கு எங்களுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை, மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறோம். எந்த இயக்கம் வந்தாலும் பார்ப்பனர்கள் அதை முதலில் கைப்பற்றி விடுவார்கள். அதன்காரணமாக நடந்த கூத்துக்களும் கொஞ்ச நஞ்சமல்ல. பெரிய தொழிற்சங்க தலைவர்களாக கருதப்பட்டவர்கள் கூட "எங்களுக்கு தனியாக அரிசி கொடுங்கள், நாங்கள் பிராமணர்களிலேயே உயர்ந்த ஜாதி, நாங்களேதான் சமைத்து சாப்பிடுவோம்" என்று கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டிலேயே செய்தவர்கள் இருக்கிறார்கள்.

1927ஆம் ஆண்டு சென்னையில் நடந்த தலைமை செயற்குழுவில்தான் பிராமணர் சங்கத்தில் இருந்து எல்லோரும் விலக வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. அப்படி ஒரு இயக்கமாக, அதுகுறித்து சிந்திக்காதவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். 1930-இல் நடந்த மூன்றாம் அகிலத்தின்போது இந்தியாவில் இருந்து இரண்டு பேர் அறிக்கை கொடுத்தனர். அப்துல் ராவுஃப் மற்றும் விரேந்திரநாத் பட்டாச்சார்யா கொடுத்த அந்த அறிக்கையில், ஜாதியத்தைப் பற்றி மிகத் துல்லியமாக குறிப்பிட்டுள்ளனர். "இந்தியாவில் வர்க்கமாக இருக்க வாய்ப்பில்லை, ஜாதியாகத்தான் இருக்கிறார்கள். இந்தியத் தொழிலாளர்களும் ஜாதியாகத்தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். நாம் தற்போது கடுமையாக விமர்சிக்கும் மனுஷ்மிருதி பற்றி மார்க்ஸ் தனது "மூலதனம்" நூலில் பதிவு செய்துள்ளார். நாம் ஏன் இதை கவனிக்கத் தவறிவிட்டோம்



என்பது சிந்திக்க வேண்டியது.

வர்க்கமும் ஜாதியும் ஒருங்கிணைந்தது என்று சொல்லுகிறோம், இரண்டுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பதுதான் எனது கருத்து. ஜாதியால் அடக்கப்பட்டவர்கள்தான் வர்க்க சுரண்டலுக்கும் ஆளானவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் பெரு முதலாளிகளில் உயர் ஜாதிக்கார்களே இருக்கிறார்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் கூட சொல்லிக்கொள்ள ஆள் இல்லை. பாம்பே டையிங் நுஸ்லி வாடியா, அசிம் பிரேம்ஜி என 2 இசுலாமியர்கள் மட்டும் தவறிப்போய் வந்துவிட்டார்கள். வேறு யாரும் இல்லை என்பதில் இருந்தே வர்க்கத்துக்கும் வர்ணத்துக்கும் இடையிலான உறவு என்னவென்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இந்த கேள்விகளை பெரியார் பல நேரங்களில் எழுப்பியிருக்கிறார். சிவதாபுரத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தை தொடங்கி வைத்துவிட்டு பெரியார் பேசுகையில், "சதி செய்வதற்கு என்றே ஒரு ஜாதியில்லாத நாட்டில் பிறந்த மார்க்சும், லெனினும் இந்த வருண பேதங்களை கவனிக்காமல் விட்டிருக்கலாம், நம்மவர்கள் ஏன் கவனிக்கவில்லை" என்று கேட்டார் பெரியார். இன்னொன்றையும் கேட்டார் பெரியார். "உபரி யாருக்குப் போகிறது என்பதை வைத்துத்தானே நாம் முடிவு செய்கிறோம். ஆனால் இந்த நாட்டின் உபரி முதல் போட்ட முதலாளிக்கு போவதைவிட எதுவும் போடாத ஒருவன் கைக்குத்தான் போகிறது. பிறவி முதலாளிகளுக்கும், கல் முதலாளிகளுக்கும் உபரிகள் போய் சேர்ந்து கொண்டே இருக்கிறது." என்றார்

பெரியாரின் கொள்கை என்ன என்று கேட்டால் ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை, பொதுவுடைமை, தனித் தமிழ்நாடு ஆகிய நான்கைச் சொல்லாம். ஆனால் பொதுவுடைமை என்பதை பெரியாருக்கு பின்னால் வந்த தலைமைகள் பேசாசமல் விட்டுவிட்டன என்பது ஒரு அவலம்தான். 1973-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பெரியார் இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்னால், "சமதர்மம்" என்ற தலைப்பில் விடுதலையில் ஒரு தலையங்கம் எழுதினார். இந்த நாடு ஜாதி ஒழிந்த ஒரு சமதர்மம் உடைய நாடாக மாற நம்முடைய பங்கு என்ன என்பதைப் பற்றி அந்த தலையங்கத்தில் எழுதினார். அதற்கு ஒரு வருடத்துக்கு முன்பு "கம்யுனிசம்" என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். ஆனால் அடுத்து வந்தவர்கள் பொதுவுடைமையை முதன்மைப்படுத்தவில்லை என்பது எங்கள் இயக்கத்தின் பக்கமும் (பெரியாரிய இயக்கங்களின்) இருக்கிற ஒரு குறைபாடுதான்.

நம் நாட்டிற்கு சுரண்ட வந்த ஆங்கிலேயர்கள், 1871-இல் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தினார்கள். அப்போது சென்னை மாகாணத்திற்கு டபிள்யூ.ஆர். கார்ணிசு என்பவர் கணக்கெடுப்பு அதிகாரியாக இருந்தார். "அரசாங்கம், இந்த மண்ணின் சிக்கல்களை, மக்களின் சிக்கல்களை நேராக தெரிந்து புரிந்துகொள்ள வேண்டும். பார்ப்பன கண்ணாடி போட்டுப் பார்த்தால் பல குழப்பங்கள் ஏற்படும்" என்று முன்னுரையில் அவர் எழுதினார். இது உங்கள் ஆட்சிக்கு பாதுகாப்பல்ல என்றும் ஆங்கிலேய அரசை அவர் எச்சரித்தார். எங்கே இருந்துவந்த ஒரு ஆங்கிலேயர், இந்த நாட்டில் சில ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தபோதும் கூட இந்த மண்ணின் சிக்கல்களை சரியாகப் புரிந்து கொண்டார். பின்னாளில் 1901-இல் வந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி, "இந்த நாட்டில் எல்லோரும் வசிக்கும் இடம், புசிக்கும் உணவு, உடுத்தும் உடை, பேசும் மொழி என எல்லாவற்றையும் ஜாதியம்தான் தீர்மானிக்கிறது. அந்த ஜாதியம் என்ற நச்சுப் பல்லில், சக்கரத்தில் சிக்கி உழைக்கும் மக்கள் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்று எழுதினார்.

ஆனால் நாம் (பொதுவுடைமை இயக்கங்கள்) ஏன் இவ்வளவு காலம் இதனை கவனிக்காமல் விட்டோம் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. அதை தீர்த்துவைக்கிற விதமாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. இந்த இயக்கத்தின் திட்டங்களை மிக அழகாக விவரிக்கும் விதமாக துண்டறிக்கை இருக்கிறது. இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிற அனைத்து ஜாதி அர்ச்சகர் உரிமை, தில்லை நடராஜர் கோயில் விவகாரம் ஆனாலும் சரி அவை எல்லாவற்றுக்கும் நீதிமன்ற தீர்ப்புகளில் ஒரு சொல்லை தவாறமல் சுட்டிக் காட்டிவிடுவார்கள். அது *Customs and Usages*, அதாவது பழக்க வழக்கங்கள்.

இதைப்பற்றி 1929-இல் ஆதிதிராவிடர் மாநாட்டில் பெரியார் பேசியிருக்கிறார். "இதுவரை பார்ப்பனர்கள் நம்மிடம், கடவுள், வேதம், புராணம், சாஸ்திரம் என்று சொல்லிக்கொண்டு இருந்தனர். ஆனால் இப்போது புதிதாக "பழக்க வழக்கம்" என்ற ஒன்றைப் பேச ஆரம்பித்துள்ளனர். நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது எல்லாவற்றையும் விட கொடுமையான சொல்லாக நான் பார்க்கிறேன்" என்று அப்போதே சொன்னார் பெரியார். கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் "பிரஜா உரிமை" என்ற திட்டம் குறித்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதில் பயன்படுத்தப்பட்டிருந்த "மத நடுநிலைமை" "பழக்க வழக்கம்" என்ற சொற்களைப் பற்றி தொடர்ந்து மூன்று வாரம் தலையங்கம் எழுதினார் பெரியார். "அது என்ன மத நடுநிலைமை? மதச்சார்பின்மை என்று பேசுவதை விட்டுவிட்டு மத நடுநிலைமை என்று வைத்துள்ளான். இதில் ஒரு சூழ்ச்சி உள்ளது." என்று எழுதினார் பெரியார்.

1931-இல் ஆகஸ்டில் விருதுநகரில் அதற்காக ஒரு மாநாட்டை கூட்டி, பெரியார் எதிர் தீர்மானங்கள் நிறைவேற்றினார். அந்த மாநாட்டில் பேசிய பெரியார், "ஜாதியின் கொடுமையான ஆதிக்கம் நம்மை வளரவிடாமல் தடுத்திருக்கிறது." என்றார். ஜாதியத்திற்கு தத்துவங்கள் அடிப்படையாக இருக்கின்றன. முதலில் வேதக்கடவுள்கள் இருந்தன, இப்போது அவற்றை மறந்து விட்டார்கள். மனுசாஸ்திரம்தான் இப்போதும் இருக்கிறது. மனுசாஸ்திரத்தின் பல கூறுகளை புரட்சியாளர் அம்பேத்கரும் ஆய்வு செய்து எழுதியிருக்கிறார்.

இந்து மதமாக உருவானதற்கு முன்பிருந்த பிராமணிய மதம் மறுமணத்தை பற்றி கொஞ்சம் பேசியிருக்கிறது. உரிய வயதை பெற்ற பின்னர்தான் திருமணம் என்று அப்போது இருந்திருக்கிறது. ஆனால் மனுதான் மாற்றியமைத்திருக்கிறது. இதுபோல பலவற்றை மாற்றியமைத்திருக்கிறார்கள் என்பதை புரட்சியாளர் அம்பேத்கர் தனது ஆய்வில் கூறியிருக்கிறார். உபநயனம் என்பதைப் பற்றியும் அம்பேத்கர் ஒன்றை வேடிக்கையாச் சொல்வார். உபநயனம் என்பது பட்டமளிப்பு விழாவைப் போல. ஒருவனுக்கு கல்வி முடிந்த பின்பு அவனுடைய குரு, எந்த வர்ணத்தைச் சேர்ந்தவன் என்று முடிவு செய்வார். இது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை பரிசீலனை செய்யப்படும். அறிவாற்றலின்படி மாறத்தக்கதாக ஒன்றாக வர்ணம் இருந்தது. பின்னர் அதை வாழ்நாள் முழுவதுக்குமாக ஒரே வர்ணமாக மாற்றிவிட்டனர். அதற்குப் பின்னால், பள்ளிக்குப் போய் பட்டம் பெறுவதைப் போல இருந்த வர்ணத்தை, பள்ளிக்கு அனுப்பும்போதே தந்தைக்கு அந்த பதவியைக் கொடுத்து பூணூல் போட்டு அனுப்பிவைத்தனர். அதன்மூலம் பிறவி அடிப்படையில் ஜாதி என்று உண்டாக்கிவிட்டனர்.

ஆனால் வருணங்கள்

**"இதுவரை பார்ப்பனர்கள் நம்மிடம், கடவுள், வேதம், புராணம், சாஸ்திரம் என்று சொல்லிக்கொண்டு இருந்தனர். ஆனால் இப்போது புதிதாக "பழக்க வழக்கம்" என்ற ஒன்றைப் பேச ஆரம்பித்துள்ளனர். நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.**

4ம் பக்கத் தொடர்ச்சி

IT

# தலையங்கம்

## தலைதூக்கும் சர்வாதிகாரத்தை ஒட்ட நறுக்குவோம்

என்.டி.டி.வி நிறுவனத்தை ஏற்கெனவே முழுமையாக கையகப்படுத்திவிட்ட அதானி குழுமம், இப்போது ஐ.ஏ.என்.எஸ் செய்தி நிறுவனத்தின் பங்குகளை 50 விழுக்காடு வாங்கிவிட்டது. ஊடகத் துறையில் அதானி குழுமம் தனது ஆக்டோபஸ் கரங்களை பரப்பிக்கொண்டே இருப்பதன் பின்னணி குறித்த சந்தேகங்கள் வலுத்துக்கொண்டே இருக்கின்றன. இன்னொரு பக்கம் ஒன்றிய அரசுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டாலே, கடும் நெருக்கடிகளை ஊடக நிறுவனங்கள் எதிர்கொள்கின்றன. குஜராத் கலவரம் தொடர்பாக முக்கிய ஆவணப் படம் ஒன்றை இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிபிசி நிறுவனம் வெளியிட்டது. அதற்காக, பிப்ரவரி மாதத்தில் வருமான வரித்துறை சோதனையை எதிர்கொண்டது பிபிசி நிறுவனம். அதேபோல ‘‘நியூஸ் கிளிக்’’ ஊடகம் சீனாவில் இருந்து நிதி பெற்றதாகக் கூறி, அதன் அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டது. ‘‘நியூஸ் கிளிக்’’ நிறுவனரான பிரபீர் புர்காயஸ்தா இன்னமும் சிறையில் இருக்கிறார். ஒன்றிய அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டால் இதுதான் நிலைமை என்று பகிரங்கமாக மிரட்டுவதாகவே இச்சம்பவங்கள் இருந்தன.

டிசம்பர் 13-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் நடந்த தாக்குதல் சம்பவத்தைக் கூட பல ஊடகங்கள் வெளிப்படையாக பேச முன்வரவில்லை என்பது மட்டுமின்றி, வண்ணப் புகை வீச்சு, புகை உமிழும் கருவி என்றெல்லாம் வார்த்தைகளில் கூட அதீத மென்மைப்போக்கை கடைபிடித்தன. மைசூருவை சேர்ந்த பாஜக எம்.பி. பிரதாப் சிம்ஹா தான் அனுமதிச் சீட்டு வாங்கிக் கொடுத்தார் என்பதுகூட விவாதமாக்கப்படவில்லை. ஊடகங்கள் மட்டுமல்ல, தேர்தல் ஆணையம், நீதிமன்றங்கள், சிபிஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, புள்ளியியல் துறை, நிதிக்குழு என தன்னாட்சி அதிகாரம் கொண்ட அனைத்து அமைப்புகளும் சிதைந்து சீரழிந்து நிற்கின்றன. எதிர்க்கட்சிகள், சமூக அமைப்புகள், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் மட்டும் இந்த அச்சத்தை எழுப்பவில்லை.

ரிசர்வ் வங்கியின் உயர் பதவியில் இருந்தவர்கள், புள்ளியியல் துறையின் உயர் பொறுப்புகளில் இருந்தவர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் பலரும் இந்த அச்சத்தை கடந்த காலங்களில் பலமுறை வெளிப்படுத்தியுள்ளனர். அந்த வரிசையில் உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியாக இருந்த ரோகிந்தன் நாரிமன் சில முக்கியக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார். டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் ‘Constitution: Check And Balances’ என்ற தலைப்பில் பேசியிருக்கும் அவர், பிபிசி அலுவலகத்தில் நடந்த சோதனை, தேர்தல் ஆணைய மசோதா, காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கம், ஆளுநர்கள் நடத்தை குறித்தெல்லாம் கவலை தெரிவித்திருக்கிறார். ‘‘ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் தருணங்களில் நீதிமன்றங்கள் விழிப்போடு இருக்க வேண்டும். பத்திரிக்கை சுதந்திர குறியீட்டில் இந்தியா 161-வது இடத்தில் இருந்து 180-வது இடத்துக்கு பின்தங்கியுள்ளது. சில செய்திகளுக்காக வருமான வரிச்சோதனை நடத்தப்படுகிறது என்றால், அந்த சோதனையை சட்ட விரோதமானது என்று நீதிபதிகள் துணிச்சலோடு சொல்ல வேண்டும். ஊடகங்கள் கொல்லப்பட்டால் அதற்குப் பிறகு வேறெதுவும் இல்லை’’ என்று நாரிமன் கூறியிருக்கிறார்.

அதேபோல தேர்தல் ஆணையரை தேர்வு செய்யும் குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, ஒன்றிய அமைச்சரை இணைத்திருக்கும் பாஜக அரசின் புதிய மசோதா குறித்தும் நாரிமன் கவலை தெரிவித்திருக்கிறார். பிரதமர், ஒன்றிய அமைச்சரை தவிர எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் மட்டுமே அக்குழுவில் இருப்பதால், இனி பிரதமர் விரும்பும் நபரே தேர்தல் ஆணையராக வர முடியும் என்ற சூழலை பாஜக அரசு ஏற்படுத்தியுள்ளது. அப்படியானால் இனி தேர்தல்கள் எப்படி பாரபட்சம் இல்லாமல் நடைபெறும் என்ற கேள்வியும் கூடவே எழுகிறது. ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை நீக்கி 2019ஆம் ஆண்டில் பாஜக அரசு செய்த சட்டத் திருத்தம் செல்லும் என்று உச்சநீதிமன்ற 5 பேர் கொண்ட அமர்வு சமீபத்தில் தீர்ப்பளித்தது.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை நீக்கியதன் மூலம், மற்ற மாநிலங்களுக்கான உரிமைகளையும் பறிக்கிற துணிச்சல் பாஜக அரசுக்கு கிடைத்திருக்கிறது. மாநில சட்டமன்ற முடிவுகளை மதிக்காமல், செயல்படும் ஆளுநர்களே அதற்கு சாட்சியமாகி இருக்கிறார்கள். இதையும் தனது பேச்சில் குறிப்பிட்டிருக்கிற நரிமன், ‘‘காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது சட்டப் பிரிவை நீக்கியது கூட்டாட்சியை சிதைக்கும் செயல்’’ எனக் குறிப்பிட்டுள்ளார். சர்வாதிகாரப் பாதையை நோக்கி பாஜக அரசு நகர்ந்து கொண்டிருக்கிறது என்ற அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்களின் எச்சரிக்கைக்கு வலுசேர்ப்பதாக அமைந்திருக்கிறது ஓய்வுபெற்ற நீதிபதி நாரிமனின் இப்பேச்சு.


அனைத்து மட்டங்களில் இருந்தும் பாஜக அரசின் இத்தகைய மோசடிகளை அம்பலப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும். அதன்மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பாஜக ஆட்சியை அகற்ற வேண்டுமென்பது நமக்குப் பிடித்தவர்களை, அந்த இடத்தில் அமர வைக்க வேண்டுமென்பதற்காக அல்ல. இதற்கு முந்தைய ஆட்சிக்காலங்களில் இல்லாத வகையில் அரசியலமைப்பின் அடித்தளம் கூட இல்லாத அளவுக்கு, அடியோடு பெயர்த்தெடுத்துவிட்டு மனுநீதி ஆட்சியை நிலைநிறுத்த துணிந்திருக்கிற பார்ப்பனிய ஜனதா அரசை அகற்ற வேண்டுமென்பதற்காகவே. அரசியல் கட்சிகள், அமைப்புகள் என்ற எல்லைகளுக்கு அப்பாற்பட்டு அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டியது அவசியம்.

## குஜராத் மாடலின் அவலத்தை பாரீர்!

குஜராத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 41,632 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. திமுக எம்.பி.கள் தனுஷ் எம்.குமார், ஜி.செல்வம் ஆகியோர் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பாக மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு எழுத்துப்பூர்வ பதில் அளித்துள்ளது. நாடு முழுவதும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் 4.25 லட்சம் பேர், கடந்த 3 ஆண்டுகளில் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குஜராத்தில் மட்டும் 3 ஆண்டுகளில் 41,632 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு குழந்தைகளின் இறப்பு விகிதமும் அதிகரித்துள்ளது. கடந்த 2020-21 நிதியாண்டில் 9,606 குழந்தைகளும், 2021-22 நிதியாண்டில் 13,048 குழந்தைகளும், 2022-23 நிதியாண்டில் 18,978 குழந்தைகள் என ஊட்டச்சத்து குறைபாடு பாதிப்பு குஜராத்தில் இரட்டிப்பாகி வருகிறது. குஜராத்தில் ஆண்டுக்கு சராசரியாக 12 லட்சம் குழந்தைகள் பிறப்பதாக குறிப்பிட்டுள்ள காங்கிரஸ் கட்சி அதில் 30,000 குழந்தைகள் இறக்கும் அவலம் தொடர்வதாக குற்றம் சாட்டியுள்ளது. குஜராத்தில் உள்ள 39% குழந்தைகள் வயதிற்குரிய ஏற்ற எடையில் இல்லை என்று தேசிய குடும்ப நல ஆய்வில் தெரியவந்துள்ளது.

## கழக நாட்காட்டி தயார்!




*2024ம் ஆண்டுக்கான திராவிடர் விடுதலைக் கழக நாள்காட்டி தயாராக உள்ளது. தமிழுக்கும், தமிழர்களுக்காகவும் உழைத்த வெளிநாட்டு அறிஞர்களின் வண்ணப் புகைப்படங்கள் அடங்கிய நாள்காட்டி.*

தொடர்புக்கு : தபசி குமரன் - 99417 59641

தலைமை நிலையச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

## கழக ஏட்டுக்கு அன்பு தனசேகர் நன்கொடை




கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகரின் தந்தை தே. குப்புசாமி அவர்களின் 90வது பிறந்தநாள் விழா மற்றும் சந்திரா - குப்புசாமி ஆகியோரின் 60வது மணிவிழா, 17.12.2023 ஞாயிறு மாலை 6 மணிக்கு சைதாப்பேட்டை புனித தோமையர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

தொடர்ந்து அன்பு தனசேகர் ‘‘புரட்சிப் பெரியார் முழக்கம்’’ இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.10,000 - யை கழகத் தலைவரிடம் வழங்கினார்.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், திமுக பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசு, குகன், சேத்துபட்டு இராசேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பகுத்தறிவை போதித்த கலைஞரின் கலைப் படைப்புகள்



*(கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நீர்வளத்துறை வெளியிட்டுள்ள மலரில் “பகுத்தறிவு சீர்த்திருத்தச் செம்மல்” என்ற தலைப்பில் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரை) கடந்த இதழின் தொடர்ச்சி...*

மக்கள் மத்தியில் புரையோடிக் கிடக்கிற மூட நம்பிக்கைகள், புராணங்களில் எழுதி வைக்கப்பட்டிருக்கிற ஆபாசங்களை எழுதியெல்லாம் ஆதாரப்பூர்வமாக விளக்கி, ‘சோ’ அதற்கு மறுப்பே எழுத இயலாத அளவுக்கு பகுத்தறிவுச் சுடராக மிளிர்ந்தவர் கலைஞர்.

இந்தியாவில் வேறெந்த தலைவர்களுக்கும் தோன்றாத, சமத்துவபுரம் என்ற மாபெரும் திட்டம் கலைஞரின் எண்ணத்தில் உதித்து செயல்வடிவம் பெற்றதுதான் அவரது பகுத்தறிவின் ஆற்றலுக்கான உச்சபட்ச சான்று. ஊர், சேரி, அக்ரகாரம் என மூன்றாய் பிரிந்து கிடக்கும் சமூகக் கட்டமைப்பை தகர்த்து, சமன்படுத்தும் முன்முயற்சியை செய்ய வேண்டுமென்று தேர்தல் அரசியலில் எவருக்குமே தோன்றவில்லை, கலைஞருக்கு மட்டும்தான் தோன்றியது. அதற்கான முன்மாதிரியாக பட்டியல் சமூகத்தினர், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர், உயர்ஜாதியினர் என அனைத்து தரப்பு மக்களும் ஒன்றாக வாழும் வகையில் பெரியார் நினைவு சமத்துவபுரங்களை கட்டியெழுப்பினார். அதிலும் ஆழமாக சிந்தித்து பட்டியல் சமூகத்தினரின் பாதுகாப்புக்காக சமத்துவபுரங்களில் கூடுதல் வீடுகளை அவர்களுக்கு ஒதுக்கினார்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை மட்டுமல்ல, குடும்பங்களுக்கு உள்ளும் இருக்கும் பாலின பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்ற உறுதியான சிந்தனை கொண்டவராகவும் கலைஞர் திகழ்ந்தார். அதனால்தான் ‘பெண்களுக்கு சொத்துரிமை’ என்ற பெரியாரின் மகத்தான எண்ணத்துக்கு அவரால் செயல்வடிவம் கொடுக்க முடிந்தது. அரசுப்பணிகளில், உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு பார்த்துப்பார்த்து இடஒதுக்கீடு கொடுக்க முடிந்தது.

ராமன் வனவாசம் புறப்பட்ட மறுநொடியே சீதையும் ராமனோடு புறப்பட்டாள், நல்ல மனைவி என்பவள் இப்படித்தான் கணவன் செயலுக்கும் சொல்லுக்கும் பணிந்து நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் மனுதர்மத்தின்படி எழுதப்படாத விதி. ஆனால் அதைக்கூட வேறு விதமாகச் சிந்தித்தார் கலைஞர். “சீதை ஒன்னும் விவரம் தெரியாம புறப்படல. வீட்டிலே இருந்தால் மாமனார், மாமியார், கொழுந்தன் என பெரிய கூட்டத்திற்கே சமைத்துப்போட வேண்டும். அதற்கு காடே பரவாயில்லை என்றுதான் புருஷன் கூட கிளம்பிட்டாள்” என அதையும் பெண்ணின் பார்வையில் இருந்து பார்த்து, தனக்கே உரிய தனித்துவமான பாணியில் புதியதோர் விளக்கம் கொடுத்தார். பெண்கள் அடுப்படியில் முடங்கி விடக்கூடாது என்ற திராவிட சிந்தனையின் வெளிப்பாடாகத்தான் கலைஞரின் இக்கருத்தும் பொருந்திப்போகிறது.

கலைஞர் தன் வாழ்நாளில் சுமார் 75 படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். அவற்றிலும் பகுத்தறிவு சிந்தனைகளை நிரம்ப வசனங்களாக வடித்தவர் கலைஞர். அதற்கான அழியா சான்றாக பராசக்தி இப்போதும் இருக்கிறது. திரைத்துறை இன்னும் எத்தனை நவீனங்களை கண்டாலும், பராசக்தியின் வசன வீச்சுகளுக்கு ஈடுகட்டி விட முடியுமா என்பது கேள்விக்குறிதான். அதனால்தான் இப்போதும் பல பல்கலைக்கழகங்களில் பராசக்தி வசனங்களை பகுப்பாய்வு செய்கிறார்கள். உரையாடல்களை நிகழ்த்துகிறார்கள். அதற்கடுத்து கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய “நாம்” திரைப்படத்தில் நாயகனின் பாத்திரமே ஒரு பகுத்தறிவுப் பரப்புரையாளர்தான். சமூகத்தில் புரையோடிப்போன ஜாதி உணர்வும், மூடப்பழக்க வழக்கங்களையும் படம்பிடித்த இன்னொருமோர் திரைப்படம் “தாயில்லா பிள்ளை”. மகாபாரதத்தை தோலுரித்த ‘நடுத்தெரு நாராயணி’, பக்தியின் பெயரால் சாமியார்களை புரட்டி எடுக்கும் ‘சங்கிலி சாமியார்’ சிறுகதைகள், கடவுள், மத, மூடநம்பிக்கைகளை விளாசிய ‘வெள்ளிக்கிழமை’ புதினம் என கலைஞரின் பகுத்தறிவு பிரச்சாரங்கள் அவரது கலையுலகப் படைப்புகள் அனைத்திலும் நிரம்பி வழிந்தன.

**“சீதை ஒன்னும் விவரம் தெரியாம புறப்படல. வீட்டிலே இருந்தால் மாமனார், மாமியார், கொழுந்தன் என பெரிய கூட்டத்திற்கே சமைத்துப்போட வேண்டும். அதற்கு காடே பரவாயில்லை என்றுதான் புருஷன் கூட கிளம்பிட்டாள்”**

பகுத்தறிவு என்பது தனக்கான தனிச்சொத்தாக மட்டுமே இருந்தால் போதுமானது என்று கலைஞர் கருதிவிடவில்லை. அதனால்தான் வாய்ப்பு கிடைத்த இடங்களில் எல்லாம், மூடத்தனங்களுக்கு எதிரான கருத்துக்களை சவுக்கடிகளாய் கொடுத்துக்கொண்டே இருந்தார். திரைத்துறை வழியாக மக்களுக்கும் கடத்தினார். எல்லாவற்றுக்கும் தன்னைப் பின்பற்றும் தோழர்கள் மிகச்சிறந்த பகுத்தறிவுவாதிகளாக இருக்க வேண்டுமென்ற அக்கறையும், கவலையும் கொண்டவராக கலைஞர் இருந்தார். உடன்பிறப்புகளுக்கு அவர் எழுதிய கடிதங்களில் பலமுறை அதை மெய்ப்பித்திருக்கிறார்.

“ஜாதி, மதமென்னும் சமூக அமைப்புகளால் ஏற்பட்ட பேதங்களை அகற்றுவதற்கு மட்டுமல்ல, உழைக்க ஓர் பிரிவு, உண்டு கொழுக்க ஓர் பிரிவு என்ற பொருளாதார பேதத்தையும் சுட்டிக்காட்டி ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திடவும் பகுத்தறிவு மன்றமே தீர்ப்பு எழுதியது” ,

“சமுதாயத்துறை, பொருளாதாரத் துறை, அரசியல் துறை அனைத்திலுமே பகுத்தறிவு நீரோடை தங்கு தடையின்றிப் பாய்ந்தோடிட வேண்டும்; அப்போதுதான் நாடு வாழும்! நலிவு தீரும்! பண்பு சிறக்கும்! பளிங்கெனத் தெளிவு பிறக்கும்”

“சமுதாயக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும், நேர்மையையும் நெறியையும் மூடநம்பிக்கைகளால் நிலை நிறுத்த முடியாது”

என்றெல்லாம் உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதினார் கலைஞர்.

இன்றைக்கு கர்நாடகாவில் மூடநம்பிக்கை எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இப்படியொரு சட்டத்தை இந்தியா முழுமைக்கும் இயற்ற வேண்டுமென்கிற எண்ணம் கலைஞருக்கு இருந்திருக்கிறது. “அதிசய வேலைகள், ஆருடக் கணிப்புகள், ஜோசிய மோசடிகள் இவைகள் நம்பத்தகாதவை என்று கட்சிக்கும் அப்பாற்பட்ட மேதைகள் அனைவரும் திடமாகக் கூறியாயிற்று. ஆகவே இந்தக் கொடுமையை ஒழிக்க - இந்திய நாட்டு அளவில் உடனடியாகச் சட்டம் தேவை!” என்று வலியுறுத்தியிருக்கிறார் கலைஞர். பகுத்தறிவு சிந்தனைகள் மக்கள் மனத்தில் வளராமல் இந்த நாடு வளராது என்பதில் கலைஞர் திடமான நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே, மானமும் அறிவும் கொண்ட பகுத்தறிவு சிந்தனையோடு கூடிய சமத்துவ சமுதாயத்தை படைப்போம் என உறுதியேற்பதே கலைஞருக்கு நூற்றாண்டில் நாம் செலுத்தும் மரியாதை.

(நிறைவு)

## டீரெண்டிங்கில் பெரியார்

AI எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பன்றி உருவம் போல பெரியாரை சித்தரித்து சமூக வலைத்தளங்களில் ஒரு படம் பரப்பப்பட்டது. அந்த படத்தைப் பார்த்தால் பெரியாரியவாதிகளின் மனம் புண்படும், அதில் ஆனந்தமடையலாம் என்று கருதி எவரோ பரப்பியிருக்கிறார். ஆனால் நடந்ததோ வேறு. ‘‘இந்த படம் அழகாக இருக்கிறது, படத்தை வரைந்தவருக்கு பாராட்டுக்கள், பெரியார் இருந்திருந்தால் அவரும் நிச்சயம் பாராட்டியிருப்பார். ஆடு, மாடு, கோழி, சிங்கம், புலி போன்ற மற்ற விலங்குகளைப் போல பன்றியும் ஒரு விலங்கு. அந்த விலங்கைப் போல பெரியாரை சித்தரித்தால் அதில் என்ன அவமானம் இருக்கிறது? அப்படியானால் விஷ்ணுவின் வராக அவதாரமும் இழிவானது தானா?’’ என பெரியாரியவாதிகள் எழுப்பிய கேள்விகள் சமூக வலைத்தளங்களை 2 நாட்கள் ஆக்கிரமித்துவிட்டன. வாய்ப்பை ஏற்படுத்தியாவது பெரியாரை அவ்வப்போது டிரெண்டிங்கில் வைத்துவிடுகிறார்கள் கொள்கை எதிரிகள். ‘‘எனக்கு விளம்பரமே எனது எதிரிகள்தான்’’ என பெரியார் சொன்னது அவர் மறைந்து அரைநூற்றாண்டுகள் ஆகியும் நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது.

## பெரியார் நினைவுநாள் : கழகம் முன்னெடுக்கும் நிகழ்ச்சிகள்

*__ஈரோடு வடக்கு :__ தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்ட நிறைவுப் பொதுக்கூட்டம் 24.12.2023, ஞாயிறு மாலை 6 மணியளவில் குருவரெட்டியூர் பிரகலாதன் நினைவரங்கத்தில் நடைபெறுகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் ஜெயராமன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.*

*__சேலம் :__ சேலம் மாவட்டக் கழகம் சார்பில் 119 தெருமுனைக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்தி முடித்துள்ளது. 120வது கூட்டம் பொதுக்கூட்டமாக 23.12.2023 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கொளத்தூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் ஜெயராமன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். நிகழ்வில் டி.கே.ஆர் இசைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.*

*__தஞ்சாவூர் :__ பேராவூரணி கழகம் சார்பில் பெரியார் 50வது நினைவு நாள் - வைக்கம் நூற்றாண்டு - அம்பேத்கரின் 67வது நினைவுநாள் - எது திராவிடம்? எது சனாதனம்? கொள்கை விளக்கக் கருத்தரங்கம் 24.12.2023 ஞாயிறு மாலை 4 மணிக்கு பேராவூரணி பேரூராட்சி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், கழக தஞ்சை மாவட்டத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன், தமிழ்வழி கல்வி இயக்கத் தலைவர் சின்னப்பத்தமிழர் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் கருத்துரையாற்றவுள்ளனர்.*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# இராசிபுரம் – கொளத்தூரில் திராவிட இயக்க சாதனை விளக்கக் கூட்டங்கள்

கழகம் சார்பில் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் நடைபெற்றுவருகிறது.

**கொளத்தூர் :** கொளத்தூர் ஒன்றியக் கழக சார்பில் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டம் 11-12-2023 அன்று மாலை 5மணிக்கு 9வது தெருமுனைக் கூட்டம் கோவிந்தப்பாடியிலும், 10வது தெருமுனைக் கூட்டம் கத்திரிப்பட்டி மலையாள தெருவிலும் நடைபெற்றது.

டி.கே.ஆர் இசைக் குழுவின் பகுத்தறிவுப் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி தலைமை தாங்கினார், மாணவர் அணி துணை அமைப்பாளர் சதாசிவம், முன்னாள் தலைவர் முனுசாமி, கிளைச் செயலாளர் கணேசன், செட்டிப்பட்டி கிளைச் செயலாளர் பழனிச்சாமி, குள்ளவீரன்பட்டி ஈஸ்வரன், கண்ணன் நெசவாளர் அணி, சுப்பிரமணி, தேவராஜ், பரத், இளங்கோ, கார்த்தி, குமார், கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொளத்தூர் நகரத் தலைவர் இராமமூர்த்தி, தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், வழக்கறிஞர் கண்ணகி, நாகராஜ் ஆகியோர் தெருமுனைக் கூட்டத்தின் நோக்கத்தினை விளக்கி சிறப்புரையாற்றினர்.

நிறைவாக கத்திரிப்பட்டி பழனியப்பன் நன்றி கூறினார். கபிலன் ஸ்டுடியோ விஜய்குமார் கூட்டத்தை ஒருங்கிணைத்தார். கத்திரிப்பட்டி பழனியப்பன் - கோவிந்தப்பாடி சென்னியப்பன் ஆகியோர் இரவு உணவை ஏற்பாடு செய்தனர்.

11வது தெருமுனைக் கூட்டம் 12-12-2023 அன்று மாலை 5 மணிக்கு கொளத்தூர் டெம்போ ஸ்டேண்ட் அருகிலும், 12வது கூட்டம் கொசக்கரட்டூரிலும் நடைபெற்றது.

கொளத்தூர் சூரிய குமார், கொளத்தூர் இராமமூர்த்தி, காவை ஈஸ்வரன், ஆசிரியர் செல்வம், தோழர் சேட்டு குமார், ஆர்.எஸ்.நாகராஜ் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

நங்கவள்ளி பொறுப்பாளர் கிருஷ்ணன் தொகுத்து வழங்கினார்.

**நாமக்கல் :** நாமக்கல் மாவட்டக் கழக சார்பில் வைக்கம் நூற்றாண்டு மற்றும் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டமானது 13.12.2013 அன்று பள்ளிபாளையம் மற்றும் குமாரபாளையம் பகுதிகளிலும், 14-12-2023 அன்று திருச்செங்கோடு, மல்லசமுத்திரம், ஆட்டையாம்பட்டி, வெண்ணந்தூர் பகுதிகளிலும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நிறைவுப் பொதுக்கூட்டம் மாலை 6:30 மணியளவில் இராசிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு இராசிபுரம் நகரச் செயலாளர் பிடல் சேகுவேரா தலைமை தாங்கினார், நகர அமைப்பாளர் சுமதி மதிவதனி வரவேற்புரையாற்றினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு முன்னாள் உறுப்பினர் மணிவேல், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கைலாஷ், திமுக மாவட்ட இளைஞரணித் துணை அமைப்பாளர் V.பாலு Ex. MC, விசிக மண்டலச் செயலாளர் அரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நாமக்கல் கழக மாவட்டச் செயலாளர் சரவணன், பொருளாளர் முத்துப்பாண்டி, ராசிபுரம் நகரத் தலைவர் அன்பரசன், தூய்மைத் தொழிலாளர் பேரவை, பெருமாள், சி.பி.ஐ. நகரச் செயலாளர் மணிமாறன், வி.சி.க. வெண்ணந்தூர் பேரூர் செயலாளர் நடராஜன், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் மீனா, திராவிடர் கழக மின்னல் செல்வம், திவிக வெண்ணந்தூர் ஒன்றிய பொறுப்பாளர் ராமச்சந்திரன், விசிக பட்டணம் பேரூர் நிர்வாகிகள் ராமன், இளையராஜா, சிபிஐ நிர்வாகிகள் சாதிக், பயஸ், வேம்பு, பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மல்லசமுத்திரம் ஒன்றியப் பொறுப்பாளர் பெரியண்ணன் நன்றி கூறினார்.

# மனு சாஸ்திரத்தைப் படித்து கூட இருக்க மாட்டார்கள் : ஆனால் பின்பற்றுகிறார்கள்

**முதல் பக்கத் தொடர்ச்சி**

என்றால்தான் பிராமணர், சத்திரியர், வைசியர். சூத்திரர் என்று நான்குதானே? எப்படி நாம் நாலாயிரம் ஜாதிகள் ஆனோம் என்று கேள்வி எழுகிறதே! அதற்குத்தான் எந்த ஜாதி எந்த ஜாதியோடு கலந்தால் எந்த ஜாதி பிறக்கும் என்றும் எழுதி வைத்திருக்கிறார்கள். அதைவைத்து பெரியார் 1930-இல் “விபச்சாரமே ஜாதிக்கு காரணம்” என்ற கட்டுரையை எழுதினார். “ஜாதி விளக்கம்” என்ற நூலில் இருந்தெல்லாம் ஆதாரங்களை எடுத்துச் சொல்லியிருப்பார் அந்த கட்டுரையில். ஒரு பார்ப்பன பெண்ணோடு ஒரு சூத்திரன் கள்ள உறவு கொண்டு குழந்தை பிறந்தால் அவன் ‘சண்டாளன்’ என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

“சண்டாளர்களின் எண்ணிக்கையையும், பார்ப்பன பெண்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒவ்வொரு பார்ப்பன பெண்ணும் விபச்சாரம் செய்திருக்க வேண்டும், ஒவ்வொரு சூத்திரனும் கேடுகெட்டவனாக பாலியல் வல்லுறவில் ஈடுபடுபவனாக இருந்திருக்க வேண்டும்.” என்று அம்பேத்கரும் அதை வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார். “சண்டாளர்கள் மீண்டும் பார்ப்பன பெண்களோடு கள்ள உறவு கொண்டு பிறந்த குழந்தைகள் தான் அவர்கள் தான் சரும வேலைக்காரர்கள். அதாவது தோல் வேலை செய்பவர்கள்.” என்று எழுதி வைத்திருப்பதை பெரியாரும் சுட்டிக்காட்டுகிறார்.

நாலாயிரம் ஜாதிகள் வந்துவிட்டன, இப்போது வேறு வேறு ஜாதியைச் சேர்ந்தர்கள் திருமணம் செய்துகொண்டால் இன்னொரு ஜாதி கூடிவிடப்போகிறது, அதனால் என்ன ஆகிவிடப்போகிறது என்று நாம் கூட பலமுறை கேட்டுவிட்டோம். அதற்குத்தான் மனுசாஸ்திரத்தில் இன்னொன்றையும் எழுதிவைத்திருக்கிறார்கள். எந்த திருமணத்தை ஏற்றுக் கொள்ளலாம், எந்த திருமணத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அனுலோமா, பிரதிலோமா என்ற 2 திருமண வகைகள் உள்ளன. உயர்ஜாதி ஆண் கீழ்ஜாதி பெண்ணை திருமணம் செய்தால் அது அனுலோமா, அந்த திருமணம் அனுமதிக்கப்படும். கீழ்ஜாதியை சேர்ந்த ஆண் மேலான ஜாதியைச் சார்ந்த பெண்ணை திருமணம் செய்தால் அது பிரதிலோமா, ஏற்றுக் கொள்ளப்படாது. இத்தகைய பிரதிலோமா திருமணங்களுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று மனுசாஸ்திரத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதை படித்துக்கூட இருக்க மாட்டார்கள், ஆனால் இன்றும் செய்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உயர் ஜாதியினரோடு கீழ் ஜாதியினர் சமமாக அமர்ந்தால் அவன் பிட்டத்தை அறுக்க வேண்டும், உயிர்போகும் அளவுக்கு தண்டிக்க வேண்டும் என்றும் மனுசாஸ்திரம் சொல்கிறது. செகுடந்தாளி முருகேசன் வாழ்வில் அதுதான் நடந்தது. பேருந்தில் சரிசமமாக அமர்ந்து வந்தார் என்றுதானே கொலை செய்தார்கள்?

மனுசாஸ்திரம் இப்படிச் சொல்கிறது என்று கொலை செய்தவர்களுக்கு தெரியுமா? ஆனாலும் செய்தார்கள். நம்மை அறியாமல் நம் மூளையில் இதையெல்லாம் ஏற்றிவைத்த திறமை பார்ப்பனர்களுக்கு உண்டு. பார்ப்பனர்கள் ஏற்றிவைத்த அந்த சிந்தனையை நம் மக்கள் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அறிவியல் வளர்ந்து, அறிவியல் கல்வியை நாம் பெற்று, முற்போக்கான சிந்தனைகளை நாம் உள்வாங்கிய பின்னாலும் ஜாதியமும், ஆணாதிக்கமும் எங்கோ ஓரிடத்தில் இன்னமும் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது. ஒருவர் மார்க்சிஸ்ட்டாக இருப்பார், பெரியாரிஸ்ட்டாக இருப்பார், ஆனால் வீட்டில் ஆணாகத்தான் இருப்பார் என்று நான்கூட பல திருமணங்களில் கூறியிருக்கிறேன். நாம் ஏற்றுக்கொண்ட தத்துவங்களும் கொள்கைகளும் நமக்கு வழிகாட்டுகின்றன, ஆனால் வாழ்க்கையில் அதைப் பின்பற்றாமல் ஆணாதிக்கம் ஏதோ மரபணுவில் கலந்துவிட்டதைப் போல நடந்து கொள்வார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 22, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran